திரு. நா. சௌந்தர பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே உயர்நிலைப்பள்ளியில் வேலைசெய்யும் குமாஸ்தாக்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கப்படுகிறதா ? தனியார் உயர்நிலைப்பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்கள் குமாஸ்தாக்கள் ஆகியோருக்கு ஓய்வு ஊதியம் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : For want of clerical staff in high schools as well as middle schools, most of the clerical work is done by the teaching staff with the result their efficiency is lost. Will the Government think of the possibility of extending this facility of appointing clerical staff to the middle schools which were previously known as " Upper Primary Schools " ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மிடில் ஸ்கூல்ஸ் தரத்திலும், எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் எந்தெந்த நேரத்தில், யு.டி.சி., எல்.டி.சி., போடலாம் என்று விதிமுறை இருக்கிறது. மேலும் அதனுடைய நிதிநிலைமைகளையும் பார்க்கவேண்டும். பத்து உயர்நிலைப்பள்ளிகளில் குமாஸ்தாக்களை வைக்காமல் இருக்கிறார்கள். ஏன் வைக்கவில்லை.? அவர்களிடத்தில் பணவசதி இல்லாமல் இருக்கிறதா என்பதையெல்லாம் விசாரித்து அரசாங்கம் தக்க முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறியபோது, கன்னியாகுமரி பகுதியில் இரண்டு பள்ளிகளில் எல்.டி.சி.-க்கள் இல்லையென்று சொன்னார்கள். அந்தப் பள்ளிகளில் அரசாங்கத் தரப்பில் நியமிப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் தகவலைப்பற்றி ஏற்கனவே கேட்டிருக்கிறார்கள், பதில் கூறியிருக்கிறேன்.

திரு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சில ஆண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் பெண் எழுத்தர்களையும், சில பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் ஆண் எழுத்தர்களையும் நியமித்திருப்பதனால் சில தகராறுகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்காக ஆண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் ஆண் எழுத்தர்களையும், பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் பெண் எழுத்தர்களையும் நியமிக்க அரசாங்கம் வகைசெய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தாய்க்குலம் எல்லாத் துறைகளிலும் வரவேண்டும் என்று சொல்கிறார்கள். தகராறு எங்காவது இருந்து, கனம் உறுப்பினர் எடுத்துச்சொன்னால், அது பரிசீலிக்கப்படும்.

University Examinations.

***505 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the basis on which the examiners are selected for the University examinations in this State ?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தேர்வாளர்களை (Examiners) தேர்ந்தெடுப்பதற்காகப் பல்கலைக்கழகங்கள் விதித்துள்ள விதிமுறைகளையொட்டி அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் மூலம் தேர்வாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1969 மார்ச் 27]

திரு என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்வாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய படி, ஊதியம் எல்லாம் காலதாமதமாகக் கொடுக்கப்படுகிறது. மார்ச் மாதம் நடந்த பரீட்சைக்கு நவம்பர் மாதத்திலும், செப்டம்பர் மாதம் நடந்த பரீட்சைக்கு ஜனவரியிலும் தான் படி, ஊதியம் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். அண்மைக் காலம் வரையில்எல்லாப் பத்திரிகைகளிலும் தேர்வு முடிவுகள் வந்தன. பல்கலைக் கழகம் தேர்வுகளை வெளியிடுவதற்காகக கட்டணம் வசூலித்ததன் காரணத்தினால் ஒரு சில பத்திரிகைகளில்தான் தேர்வு முடிவுகள் வருகின்றன. ஆகவே, கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பல்கலைக் கழகம் செய்கிறது. எல்லாக் கேள்விகளையும்......

திரு. என். எஸ். வி. சித்தன்: ஆகவே, அரசாங்கம் தலையிட்டு, தேர்வு முடிவுகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவர அரசாங்கம் தக்க முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் இதைச் செய்கிறது. படி கொடுக்கும் விவகாரத்தில் ஒரு குறை இருப்பது உண்மைதான். யார் யார் தேர்வாளர்கள் என்பதறிந்து அவர்கள் அனுப்பிய மதிப்பெண்கள் வந்து, அதைப் பல்கலைக் கழகம் பரிசீலித்து, அதற்குப் பின்னாலே படி, ஊதியம் கொடுக்க வேண்டி யிருப்பதால் காலதாமதமாகிறது. விரைவில் படி, ஊதியம் சொடுப் பதற்குப் பல்கலைக் கழகம் வழிவகை செய்யும்.

திரு. ரா ராமச்சந்திர துரை : பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அதிக மார்க் வாங்கியவருக்கு இடம் கொடுக்காமல்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேர்வாளர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதைப்பற்றித்தான் மூலக் கேள்வி இருக்கிறது.

திரு. டி. மார்ட்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி கேள்விக்குப் பதில் எழுதிய விடைத்தாள்களைத் திருத்துகின்ற நேரத்தில் அதற்குக் குறைந்த ஊதியம் தரப்படுகிறது என்று கூறப்படுகிறது. அந்த ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கும் வகையில் இந்த அரசாங்கம் பல்கலைக் கழகத்திற்குச் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. கரு. சிமைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பரீட்சை எழுதி முடிந்தவுடனே, எக்ஸாமினர்கள் பின்னர் மார்க்குகளைத் திருத்திவிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தக் குற்றச் சாட்டுகளைப் போக்குவதற்காக, எஸ்.எஸ்.எல்.சி. விடைத் தாள்களை ஒரே இடத்தில் திருத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள், அதுபோல பி.ஏ., பி.எஸ்சி., பி.காம். போன்ற விடைத்தாள்களையும் ஒரே இடத்தில் திருத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, குறைகள் பொதுவாக இருப்பதாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருசில இடங்களில் இருக்கலாம். அவற்றையும் நீக்க அரசாங்கம் பாடுபடும். ஒரே இடத்தில் விடைத்தாள்களைத் திருத்தும் யோசனையை மதுரைப் பல்கலைக் கழகம் பின்பற்ற முன்வந்திருக்கிறது. அதற்காகும் செலவில் ஒரு பகுதியை நாம் ஏற்கிறோம்.